**மாத்தறை பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தறை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மாத்தறை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் போது புதிய கட்டிடத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 4,748,609 தொகை பெறுமதியான இயந்திர உபகரணங்கள் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருந்தது.<br><br>(ஆ) மீளாய்வாண்டின் போது வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 458,000 தொகை பெறுமதியான டயர்களின் பெறுமதி மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தன.<br><br>(இ) மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு செலுத்த வேண்டிய பலவினச் செலவுகள் ரூபா 215,769 தொகைக்காக பலவினக் கடன் கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | 2022 ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து கட்டிட அபிவிருத்தி வேலைக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 6,983,362 தொகை காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.<br><br>(உ) கெகனதுர சுவர்ணபுர கட்டிடம் வாயு சீராக்கலுக்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 5,256,728 தொகை இயந்திர பொறிகள் உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.<br><br>(ஊ) கடந்த ஆண்டுகளின் போது கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,335,100 இற்கான கடன்கொடுத்தோர் தீர்த்தலை மீளாய்வாண்டின் செலவொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் அட்டவணையில் உட்படுத்தப்பட்டிருந்த ரூபா 361,330 தொகைக்கான 03 கடன் கொடுத்தோர் மீதிகள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய அட்டவணைகள் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 626,961 இற்கான சமமின்கைகள் காணப்பட்டது. | 2022 ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 இணங்காமை

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைசட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி. 571 | 02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 1,935,910 தொகை பெறுமதியான 105 பலவின வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினால் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 26,218,678 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 64,194,533 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான சேகரித்தல் செயலாற்றுகை

**வீதவரி**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 5161 வீதவரி அலகுகள் காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு 5128 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 9,176,031 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக நடமாடும் சேவை நடாத்துதல், வெளிக்களத்தல் நிலுவை தொகையை சேகரித்தல் மேற்கொள்ளப்படுகின்றது என. | நிலுவை வீதவரி விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

## 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் குப்பல்கம பிணி ஆய்வு நிலையம் அமைந்துள்ள காணியின் பின்பகுதியில் மதில் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,658,250 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணியின் வேலி எல்லையை தீர்த்துக்கொள்ளாமல் பக்கச் சுவர் நிர்மாணித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இவ்வளவு காலமும் பயன்படுத்தப்பட்ட பழைய எல்லை வேலியை கவனத்தில் எடுத்து இந்த பக்கச்சுவர் நிர்மாணித்தல் மேற்கொள்ளப்பட்டதென. | விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பல்வேறு தரப்பினருக்கு நீர் வழங்கள் கொடுக்கும் போது 196 நீர் நுகர்வோரிடம் ரூபா 1,482,690 தொகையொன்று பாதை சேதப்படுத்துவதை மறுசீரமைப்பதற்காக அறவீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பாதை மறுசீரமைப்பு வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிக்கள பரிசோதனையின் போது குறிப்பிட்ட பாதையை மறுசீரமைத்தல் சரியானதல்ல எனக் கண்ட சந்தர்ப்பங்களில் பணம் விடுவித்தல் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சபையின் நிர்மாண வேலைகள் என குறிப்பிட்ட பாதையை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது என. | முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் புதிய கட்டிடத்தில் காபட் விரித்தல் மற்றும் திறைச்சீலைக்காக ரூபா 5,931,355 தொகையும், கணினி துணைக் கருவிகள் மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,650,900 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும், 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி இலக்கம் 178(5) இன் பிரகாரம் திறந்த கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருக்காததுடன், கிடைத்திருந்த கூறுவிலைகள் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு ஒன்றிற்கும் அனுப்பியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் நடைபெறாமல் இருப்பதற்கு பொறுப்பாக இருப்பேன் என. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் போது சபையின் நிதி ஏற்பாடுகளின் மீது செயற்படுத்தப்பட்டிருந்த கொங்கிரீட் வடிகால்கள் மற்றும் பக்கச் சுவர்கள் நிர்மாணிக்கும் 18 நிர்மாண வேலைகளுக்குரிய சட்டகங்கள் தயாரிக்கும் போது மாகாண பொறியியல் சேவை அலுவலகத்தினால் CT – 036 விகிதத்திற்கு பதிலாக ST – 057 விகிதம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் 2019 ஆண்டு முதல் அரைப் பகுதியின் கூறுவிலைகளின் படி ஒரு சதுரஅடிக்கு ரூபா 267 வீதம் சட்டகம் 2,105.19 சதுர மீற்றர்களுக்காக ரூபா 562,086 தொகையும் 2021 முதல் அரைப் பகுதி கூறுவிலைகளின் படி சதுரஅடியொன்றுக்கு ரூபா 889.70 வீதம் 898.41 சட்டகம் சதுர மீற்றர்களுக்காக ரூபா 799,315 தொகை என ரூபா 1,361,401 தொகை மிகையாக ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் இவ்வாறான தவறுகள் நடைபெறாமல் இருப்பதற்கு பொறுப்பாக இருப்பேன் என. | பொருத்தமான மற்றும் அனுகூலமான விகிதங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தின் ஏற்பாடுகளின் மீது நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 நிர்மாண வேலைகள் தொடர்பாக எல்லைச் சுவர் மற்றும் பக்கச் சுவரை தொடர்புபடுத்தி வடிகால் அமைக்கும் போது வடிவமைப்பு பயன்படுத்தப்படாமல் இருந்த போதிலும், அதற்காக 5,956 வடிவமைப்பு சதுரமீற்றர்களுக்காக ரூபா 87,095 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br><br>(இ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து செயற்படுத்தப்பட்டிருந்த கொங்கிரீட் வடிகால் தயாரிக்கும் இரண்டு நிர்மாண வேலைகளுக்காக 272.10 மீற்றர் நீளத்திற்கு கொங்கிரீட் பக்க வடிகால் நிர்மாணிக்கப்பட்டதென பில் பத்திரங்களில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், வெளிக்கள கணக்காய்வு பரிசோதனையின் போது கொங்கிரீட் பக்க வடிகால்களின் நீளம் 263.80 மீற்றர்களாக காணப்பட்டமையால் 8.3 மீற்றர்களுக்காக ரூபா 70,893 தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் இவ்வாறான தவறுகள் நடைபெறாமல் இருப்பதற்கு பொறுப்பாக இருப்பேன் என. | நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டும். |